# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.86/2022

| | |
|---|---|
| | Prosecution PW 6 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | மணிசேகர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.06.2024

**1,2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாலவிடுதி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.10.2021 ம் தேதி தாந்தோணிமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது 12.30 மணியளவில் பாரதி நகரில் வசித்து வரும் நாகராஜன் மனைவி காந்திமதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலையக் கு.எண்.694/2021,ச.பி.392 இதசவின் கீழ் வழக்கு பதிவு

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்குக் கோப்பினை புலன் விசாரணைக்காக பொறுப்பு ஆய்வாளர் சிவசங்கரி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

புகாரை எழுதிக்கொண்டு வந்துதான் கொடுத்தார்கள். அதை யார் எழுதினார்கள் என்று தெரியாது. 06.10.2021 ம் தேதி 18.50 மணிக்கு சம்பவம் நடந்தது. மறுநாள் 07.10.2021 ம் தேதி 12.30 மணிக்கு புகார் கொடுத்தார்கள். காலதாமதத்திற்கான குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை. சாட்சிகள் யாரையும் நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அ.சா.1 எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.